கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இரண்டாம் வருட பொதுக்கலைமாணித் தேர்வு - 2007/2008 (வெளிவாரி)
(செப்ரம்பர்/ஒக்டோபர் 2010)

**EDU 201** பிள்ளையின் விருத்தியையும் கற்றலையும் விளங்கிக் கொள்ளல்

LIBRARY
11 FEB 2011
Eastern University, Sri Lanka

நேரம் : 03 மணித்தியாலங்கள்

ஏதாவது ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

---

01.(அ) பிள்ளை விருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் சூழல் காரணிகள் பற்றிச் சுருக்கமாக விளக்குக?

(05 புள்ளிகள்)

(ஆ) பிள்ளை விருத்தியை மேம்படுத்தப் பாடசாலைச் சூழலில் எவ்வாறான சந்தர்ப்பங்களை உருவாக்க வேண்டும் என்பதை எடுத்துரைக்க?

(08 புள்ளிகள்)

(இ) பிள்ளைகளிடத்தில் கற்றல் தேக்கநிலை உருவாவதற்குப் பாடசாலையின் பங்கு எத்தகையது என்பதைச் சுருக்கமாக விளக்குக?

(07 புள்ளிகள்)

02.(அ) ஆளுமை விருத்தியில் கலாசாரத்தின் செல்வாக்குப் பற்றி விமர்சன ரீதியாக ஆராய்க?

(05 புள்ளிகள்)

(ஆ) "பிள்ளையின் வளர்ச்சிப் போக்கில் பெற்றோரின் பங்கு இன்றியமையாதது" இக்கூற்றின் தாற்பரியத்தை எடுத்துக் காட்டுக?

(07 புள்ளிகள்)

(இ) தோண்டைக்கின் பயிற்சி விதி (Law of exercise), விளைவு விதி (Law of effect) ஆகியன மாணவர்களுக்கு எந்தளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தன என்பதைச் சுருக்கமாக விளக்குக?

(08 புள்ளிகள்)

03.(அ) வகுப்பறைக் கற்பித்தற் செயற்பாட்டில் மாணவர்களை ஆயத்த நிலைக்குக் கொண்டு வருவதில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் இடர்ப்பாடுகள் பற்றிக் கருத்துரைக்க?

(07 புள்ளிகள்)

(ஆ) பிள்ளையின் முதிர்ச்சி, கற்றல், ஆயத்தநிலை என்பவற்றுக் கிடையிலான தொடர்பினை ஒப்பிடுக?

(06 புள்ளிகள்)

(இ) மக்டூகலின் இயல்பூக்க நடத்தையின் மூன்று உளக்கூறுகளும் மாணவர்களின் கற்றலில் எவ்வாறான நன்மைகளை ஏற்படுத்துகின்றன என்பதை எடுத்துரைக்க?

(07 புள்ளிகள்)

04.(அ) அறிவுசார் கற்றல் கொள்கைக்கும், கெஸ்ரால்ட் கொள்கைக்கு-மிடையிலான வேறுபாட்டைச் சுருக்கமாக ஆராய்க?

(06 புள்ளிகள்)

(ஆ) பவ்லோவின்,

$S_1 - R$ நிபந்தனைப்படுத்தப்படாத இணைப்பு
$S_2 - R$ நிபந்தனைப்படுத்தப்பட்ட இணைப்பு

ஆகியவற்றை வகுப்பறைக் கற்றல் செயற்பாட்டிற்கு எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதைப் பற்றிக் கருத்துரைக்க?

(09 புள்ளிகள்)

(இ) நுண்மதி வளர்ச்சியில் மனவெழுச்சியின் பங்கு எத்தகையது என்பதை ஒப்பிட்டு ஆராய்க?

(05 புள்ளிகள்)

05.(அ) சிறந்த ஆளுமைப் பண்புடைய மாணவர் சமுதாயத்தை உருவாக்குவதற்குப் பாடசாலைகள் எவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்பதைக் குறிப்பிடுக?

(06 புள்ளிகள்)

(ஆ) நுண்ணறிவு பற்றி அறிஞர்கள் கூறிய கருத்துக்கள் எந்தளவிற்குப் பொருத்தப்பாடு உடையவை என்பதை விமர்சன ரீதியாக ஆராய்க?

(08 புள்ளிகள்)

(இ) "தேவைகள் நிறைவேற்றப்படாமையும் மாணவர்கள் கற்றலில் பின்னடைவுக்குக் காரணமாகின்றன." இக்கூற்றின் பொருத்தப்பாட்டை விளக்குக?

(06 புள்ளிகள்)

06.(அ) பிள்ளையின் கற்றலில் பரம்பரைக் காரணிகள் செலுத்தும் செல்வாக்கை ஆராய்க?

(10 புள்ளிகள்)

(ஆ) கற்கும் விடயங்களை மனதில் நிறுத்தி வைப்பதற்கு ஞாபகத்தின் படிமுறைகள் எந்தளவிற்கு உதவுகின்றன என எடுத்துரைக்க?

(10 புள்ளிகள்)

07.(அ) பியாஜேயின் பிள்ளை வளர்ச்சிக் கட்டங்களைக் குறிப்பிட்டு இவற்றில் குழந்தைப் பருவம், கட்டிளமைப் பருவங்களிலே ஏற்படும் விருத்திகளை ஆராய்க?

(10 புள்ளிகள்)

(ஆ) பிள்ளை வளர்ச்சிக் கட்டத்தில் ஏற்படும் மொழி மற்றும் எண்ணக்கரு தொடர்பான விருத்திகளுக்குப் பெற்றோர், ஆசிரியர்கள் எவ்வாறு உதவ வேண்டும் என்பதை விளக்குக?

(10 புள்ளிகள்)

08. உங்களது அனுபவத்தில் கற்றற் கோட்பாடுகள் வகுப்பறையில் எந்தளவிற்குப் பிரயோகிக்கப்படுகின்றன என்பதைப் பாடசாலைகளை மையமாகக் கொண்டு பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக?

******